අධ්‍යාපන , උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

க.பொ.த சா / த முன்னோடி மாதிரி வினாப்பத்திரம் - 2026

G.C.E. O/L Pre- Model Question Paper – 2026

கத்தோலிக்க திருமறை	14 T 1&11	மூன்று மணித்தியாலம்

மாதிரி வினாப்பத்திரம் -1

அறிவுறுத்தல் :

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

பகுதி - 1

1) புதிய ஏற்பாட்டின் முதலாவது நற்செய்தியும் அது எழுதப்பட்ட காலமும்

1. மாற்கு நற்செய்தி , கி . பி 62 - 68 காலப்பகுதி
2. மாற்கு நற்செய்தி , கி . பி 64 - 66 காலப்பகுதி
3. மத்தேயு நற்செய்தி , கி . பி 64 - 66 காலப்பகுதி
4. மத்தேயு நற்செய்தி , கி . பி 62 - 68 காலப்பகுதி

2) திருச்சபைப் பாரம்பரியத்தில் அடங்கியிருப்பவை.

1. திருத்தூதர் காலம் முதல் நிலைத்து வரும் படிப்பினைகள்
2. திருச்சபையின் படிப்பினைகள்
3. புனித பேதுருவின் படிப்பினைகளும் செயற்பாடுகளும்
4. இயேசுவின் புதுமைகளும், படிப்பினைகளும்

3) பின்வருவனவற்றுள் புனித பவுலடியாரின் திருமுகங்களை மட்டும் கொண்டவை

1. எபேசியர், யாக்கோபு, பிலமோன், பிலிப்பியர்
2. கலாத்தியர், எபிரேயர், யாக்கோபு, கொலோசையர்
3. எபேசியர், யாக்கோபு, தீத்து, பிலமோன்
4. எபேசியர், பிலிப்பியர், கலாத்தியர், கொலோசையர்

4) சீரியப் பேரரசின் 4ம் அந்தியோக்கஸ் அரசன் காலத்தில் யூத மக்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட நூல் எது?

1. திருவெளிப்பாடு
2. யாக்கோபு திருமுகம்
3. தானியேல் நூல்
4. எபிரேயப் பிரதி

5) இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சி

1. வெரோணிக்கா
2. மகதலா மரியா
3. பேதுரு
4. யோவான்

Past Papers Wiki

6) " உங்களிற்கு அமைதி உரித்தாகுக" என இயேசுவைப் கூறியது

1. உருமாறிய போது
2. உயிர்ப்பின் எட்டாம் நாள்
3. பாஸ்கா ஞாயிறன்று
4. கெத்சமனியில் செபித்த போது

7) புனித பவுலின் இரண்டாவது மறைதூதுப் பயணத்தின் போது பின்னர் இணைந்து கொண்டவர்கள்

1. லூக்காவும் திமோத்தேயுவும்
2. திமோத்தேயுவும் யோவான் மாற்குவும்
3. லூக்காவும் பர்னபாவும்
4. திமோத்தேயுவும் யோவான் மாற்குவும்

8) பிரித்தானியர் காலத்தில் இலங்கைக்கு வந்த மறைபரப்புச் சபையினர்கள்

1. இயேசு சபை, அகுஸ்தினார்சபை, டிலாசால் சகோதரர்கள்
2. சில்வெஸ்டர் ஆசிர்வாதப்பர் சபை, டொமினிக்கன்சபை, இயேசு சபை
3. அமலமரித் தியாகிகள் சபை, இயேசு சபை, சில்வெஸ்டர் ஆசிர்வாதப்பர் சபை
4. நல்லாயன் கன்னியர் சபை, டொமினிக்கன்சபை, இயேசு சபை

9) "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்கு பசியே இராது" இவ்வாறு குறிப்பிடப்படும் நற்செய்தி

1.லூக்கா 2.மாற்கு 3. மத்தேயு 4.யோவான்

10) நற்கருணை விருந்தில் பங்கெடுப்பதற்கு

1. நற்பண்புகளுடன் வாழ வேண்டும்
2.அன்பின் கட்டளையைக் கடைப்பிடிக்க வேண்டும்
3. செபிக்க வேண்டும்
4. இரக்கச் செயல்களில் ஈடுபட வேண்டும்

11) பின்வருவனவற்றை அவதானிக்குக.

A - கொன்வென்சுவல் பிரான்சிஸ்கன் குருமடத்தில் சேர்ந்து கொண்டமை.

B - "உண்மை" என்ற பத்திரிகையை வெளியிட்டமை.

C – அலி அதா என்பவருக்கு மன்னிப்பு வழங்கியமை.

D - அருள் நிறை மரியே செபத்தை உச்சரித்துக் கொண்டு உயிர்நீத்தமை

E - புனித மரியாள் பாடசாலையில் பணியாற்றினார்.

இவற்றுள் புனித மக்ஸ்மிலியன் கோல்பே அடிகளாருடன் தொடர்புடையவை

1. A, B, D
2. A, B, E
3. B, C, D
4. C, D, E

12) அம்பிட்டிய தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்

1. புனித மக்ஸ்மிலியன் கோல்பே அடிகளார்
2. புனித யோசேவாஸ் அடிகளார்
3. அருட்பணி மைக்கல் ரொட்றிகோ அடிகளார்
4. புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்

13) மனிதனின் முக்கிய கடமை இறைவனை நம்புவதும் அந்த ..... துணிவுடன் சான்று பகருவதுமாகும். வெற்றிடத்திற்கு வரவேண்டிய சொல்

1. அன்பிற்கு
2. நம்பிக்கைக்கு
3. இரக்கத்திற்கு
4. உண்மைக்கு

14) திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்க.

A - இறைவனுக்கு ஆராதனை செய்தல் B - கல்வாரியப் பலியை நினைவு கூருதல்

C - பாவங்களுக்குப் பரிகாரம் செய்தல் D - திவ்விய நற்கருணை பவனி நடாத்துதல்

E - இறைவனுக்கு நன்றி கூறுதல்

1. A, B, C 2. A, B, E 3. A, C, E 4. B, C, D

15) மத்தேயு நற்செய்தியின்படி "உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் .....இருக்கட்டும்"

1.சகோதரனாய் 2. தொண்டராய் 3. ஆளுநராக 4. உரிமையாளனாக

16) "உனது வாளை உறையில் திருப்பிப்போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்." இவ்வாறு கூறியவர்

1. இயேசு 2. மால்குஸ் 3. பேதுரு 4. பவுல்

17) "இறைவனின் நடுநிலையாளர்" என்ற சுற்றுமடலை வெளியிட்டவர்

1. திருத்தந்தை 23ம் அருளப்பர் 2. திருத்தந்தை XIII ம் பத்திநாதர்
3. திருத்தந்தை 23ம் பத்திநாதர் 4. திருத்தந்தை XII ம் பத்திநாதர்

18) முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் பயன்படுத்தப்படும் நற்செய்திகள் முறையே.

1. மாற்கு, லூக்கா, மத்தேயு 2. லூக்கா, மத்தேயு, மாற்கு
3. மாற்கு, மத்தேயு, லூக்கா 4. மத்தேயு, மாற்கு, லூக்கா

19) இயேசு தம் சீடர்களுடன் இறுதி இரவுணவு வேளையில் இறைதந்தையிடம் செய்த வேண்டுதல்

1. உன்னத குருவின் வேண்டுதல் 2. இயேசு கற்பித்த செபம்
3. கெத்சமனி செபம் 4. விசுவாசிகள் மன்றாட்டு

20) "நான் இறைவனிடம் வேண்டும் வரை நீங்கள் இங்கேயே இருங்கள் " இவ்வாறு யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

1. இயேசுவினால் மரியாளுக்கு 2. இயேசுவினால் மார்த்தாளுக்கு
3. இயேசுவினால் தலைமைக்குருவுக்கு 4. இயேசுவினால் சீடருக்கு

21) இஸ்ராயேல் மக்கள் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறைநம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றது

1. ஐந்நூல் 2. ஞான இலக்கியம் 3. இறைவாக்கினர் நூல் 4. திருவெளிப்பாடு

22) யூதரும் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ சபையினரும் ஏற்றுக்கொள்ளும் எபிரேயப் பிரதிகள் தோற்றம் பெற்றது

1. கிரேக்கர்கள் மத்தியிலிருந்து 2.யூதர்கள் மத்தியிலிருந்து
3. எபிரேயர் மத்தியிலிருந்து 4. இஸ்ராயேல் மத்தியிலிருந்து

23) பின்வருவனவற்றுள் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்கள்

1. நாத்தான் , எலியா, அகியா , குல்தா
2. எலியா , எலிசா, மீக்கா , யோனா
3. எலிசா , மீக்கா , யோனா , குல்தா
4. நாத்தான் , எலிசா , நாகூம், அகியா

24) " எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் இனத்தவராகிய இஸ்ராயேல் மக்களிடம் நான் உன்னை அனுப்புகிறேன்" இவ்வாறு கூறப்பட்டது

1. இறைவாக்கினர் எரேமியாவிற்கு
2. இறைவாக்கினர் எசாயாவிற்கு
3. இறைவாக்கினர் எசேக்கியேலிற்கு
4. இறைவாக்கினர் ஆமோசிற்கு

25) மத்தேயு , மாற்கு ,யோவான் . லூக்கா ஆகிய நற்செய்திகளின் அடையாளங்களாவன

1. சிங்கம் , எருது , கழுகு , மனிதமுகம்
2. எருது , சிங்கம் , மனிதமுகம் , கழுகு
3. சிங்கம் , மனிதமுகம் , கழுகு , எருது
4. மனிதமுகம் , சிங்கம் , கழுகு , எருது

26) காயினைக் கொல்லுகின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான் என்பதன் பொருள்

1. தவறு செய்தவனுக்கு இறைவன் தண்டனை அளிப்பார் என்பது
2. குற்றவாளி ஒருவரின் வாழ்வின் உரிமை இறைவனுக்கே உரியது என்பது
3. குற்றவாளி ஒருவரைப் பழிவாங்குவது முறையல்ல என்பது
4. கொலை செய்தவனுக்கு மன்னிப்பு கிடைக்காது என்பது

27) இறைவன் ஆபிரகாமை அழைத்தபோது கூறியது

1. உனக்குப் புதியதொரு நாட்டைத் தருவேன்
2. உனது சந்ததியைப் பெருக்குவேன்
3. உன்னை நான் பெரிய இனமாக்குவேன்
4. உனது மூதாதையருக்கு ஆசிவழங்குவேன்

28) இறைவன் மோசேக்கு கொடுத்த அழைப்பு

1. உடன்படிக்கைப் பேழையைப் பாதுகாப்பது
2. உலகில் புதியதொரு அரசைக் கட்டியெழுப்புவது
3. பார்வோன் மன்னனை ஆட்சியிலிருந்து நீக்குவது
4. இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்துச் செல்லல்

29) 4, 6, 8 பெருந்துன்பங்களாவன முறையே

1.ஈக்களின் பெருக்கம் , கொப்புளங்கள் தோன்றுதல் , வெட்டுக்கிளி பரவுதல்
2. ஈக்களின் பெருக்கம் , கொசுக்களின் தொல்லை , கல்மழை
3. ஈக்களின் பெருக்கம் , கல் மழை, கொப்புளங்கள் தோன்றுதல்
4. ஈக்களின் பெருக்கம் , வெட்டுக்கிளி பரவுதல், தலைமகன் சாவு

30) திருமுழுக்கு யோவான் பிறந்து எட்டாம் நாள் நிறைவேற்றப்பட்ட சடங்கு

1. விருத்த சேதனம் , அர்ப்பணித்தல்
2. விருத்தசேதனம் , பெயரிடுதல்
3. விருத்தசேதனம் , திருமுழுக்கு
4. விருத்தசேதனம் , காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்

31) 72 பேரின் மறைதூதுப் பணி பற்றிக் குறிப்பிடும் நற்செய்தியாளர்

1. மாற்கு
2. மத்தேயு
3. லூக்கா
4. யோவான்

32) அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் : ஏனெனில் ……..

1. அவர்கள் கடவுளைக் காண்பர்
2. விண்ணரசு அவர்களதே
3. இறைவனின் மக்கள் எனப்படுவர்
4. நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்

33) திருமுழுக்கின் போது கிறிஸ்மாத் தைலம் பூசப்படுவதன் அடையாளம்

1. சேவை புரிதல் ஆகும்
2. திடப்படுத்தல் ஆகும்
3. அர்ப்பணிப்பு ஆகும்
4. பகிர்வுடன் பணியாற்றலாகும்

34) அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வதை அடிப்படையாகக் கொண்டு அன்பின் காரணமாக ஏற்படும் மனம் வருந்துதல்

1. பயத்தினால் மனம் வருந்துதல்
2. அன்பினால் மனம் வருந்துதல்
3. பாவமன்னிப்பின் மனம் வருந்துதல்
4. உண்மையாக மனம் வருந்துதல்

35) பின்வருவனவற்றுள் திருமண ஒப்பந்தத்தின் வாக்குறுதிகள் மூன்றையும் சரியாகக் காட்டும் விடை

A – பிரமாணிக்கமாயிருத்தல்
B – அர்ப்பணிப்பு
C – நேசித்தல்
D – மதித்து நடத்தல்
E – மன்னித்து நடத்தல்

1. A, B, C
2. A, C, D
3. B, C, D
4. C, D, E

36) இயேசுக் கிறிஸ்து நமக்கு காட்டு அன்பிற்கு பிரதியன்பு காட்ட அவரால் நிறுவப்பட்ட பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க சபை

1. இயேசுவின் திரு இருதய சபை
2. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்
3. மரியாவின் மாசற்ற சபை
4. வின்சன்டி போல் சபை

37) இறைமக்களாகிய நாம் அனைவரும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கும் பலி

1. எரி பலி
2. தானியப் பலி
3. திருப்பலி
4. பாவக்கழுவாய்ப் பலி

38) இயேசு பரலோக மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தது

1. இறைதந்தையின் விருப்பத்தின் படி
2. திருச்சபையின் வேண்டுகோளின் படி
3. மரியாளின் வேண்டுகோளின் படி
4. சீடர்களின் வேண்டுகோளின் படி

39) வேளாங்கன்னி நகரில் பால் விற்பனை செய்யும் முடவனான சிறுவனுக்கு மரியன்னை காட்சி கொடுத்தது

1. 13ம் நூற்றாண்டில்
2. 14ம் நூற்றாண்டில்
3. 15ம் நூற்றாண்டில்
4. 16ம் நூற்றாண்டில்

40) தியானம் பற்றி திருச்சபையில் மறுசீரமைப்பு ஏற்பட்டது

1. 2ம் உலக யுத்தத்தின் பின்னர்
2. 1ம் சிலுவை யுத்தத்தின்
3. 1ம் உலக யுத்தத்தின் பின்னா
4. 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர்

Past Papers Wiki

பகுதி 11

முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

1. பழைய ஏற்பாட்டின் ஞான நூல்கள் இரண்டு தருக.
2. கி.பி 1948ல் கத்தோலிக்க திருச்சபை எதிர்கொண்ட சவால்கள் 2தருக.
3. புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அருளாளர் நிலைக்கும் , புனிதர் நிலைக்கும் உயர்த்தப்பட்டது எப்போது
4. சீராக்கின் ஞானூலின் படி பிள்ளைகள் தமது பெற்றோரை மதித்து நடப்பதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக
5. இயேசுவைக் கைது செய்ய வந்தபோது இடம்பெற்ற சம்பவங்கள் இரண்டு தருக
6. ஐந்நூலில் புராணக் கதைகள் மூலம் கூறப்பட்டுள்ள இறையியல் செய்திகள் இரண்டு தருக.
7. பழைய ஏற்பாட்டில் இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் இரணடு தருக.
8. மக்கள் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டையும் எழுதுக.
9. மத்தேயு நற்செய்தியின் படி விண்ணகத் தந்தையின் மக்களாவதற்கு நாம் செய்ய வேண்டியவை இரண்டு தருக
10. இயேசு கற்பித்த செபத்தில் அடங்கியுள்ள புகழ்ச்சிக்குரிய வாழ்த்துகள் இரண்டு தருக.

2) 1. " நீங்கள் யாரென சொல்கிறீர்கள் " என இயேசு பேதுருவிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் யாது?

2. இயேசு பேதுருவிற்கு கொடுத்த அதிகாரங்கள் 3 தருக.

3. பேதுருவின் வாழ்விலிருந்து இன்றைய சமுதாயத்தின் தலைவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் 5ஐ எழுதி விளக்குக.

3) 1. விடுதலைப்பயண நூலின்படி 10கட்டளைகளில் 1வது 2வது கட்டளை எழுதுக.

2. 10 கட்டளைகளில் 1ம் கட்டளையின் படி இறைவனை எவ்வாறு அன்பு செய்ய வேண்டும்?

3. இறையன்பிற்குப் பிரதியன்பு காட்ட உம்மால் செய்யக்கூடிய செயல்கள் 5ஐ எழுதி விளக்குக.

4) 1. திருப்பலியின் நற்கருணை வழிபாட்டின் பிரதான பகுதிகள் இரண்டு தருக.

2. திருப்பலியின் போது பின்வரும் சந்தர்ப்பங்களில் பாடக்கூடிய பாடல்கள் ஒன்று வீதம் தருக.

1.வருகைப்பவனி

11.காணிக்கைப் பவனி

111.திருவிருந்து

3. திருவழிபாட்டை அர்த்தமுள்ளதாக்குவதற்கு கத்தோலிக்கராகிய நீர் உமது பங்கில் ஆற்றக்கூடிய செயல்கள் 5ஐ கூறி விளக்குக.

5) 1. 'நபி ' , 'ப்ரோபேரஸ் ' என்பதன் பொருளை எழுதுக

2. இறைவாக்கினர்கள் இறைவாக்குரைக்கும் போது பயன்படுத்திய மூன்று சொற்பதங்களையும் தருக.

3. திருமுழுக்கின் மூலம் இறைவாக்குப் பணியைப் பெற்ற நீர் ஒரு இறைவாக்கினராக செயற்படும் முறையை 5காரணிகளினூடாக விளக்குக.

6) 1. துறவற குழும வாழ்வின் ஆரம்ப கர்த்தாக்கள் இருவரைக் குறிப்பிடுக

2. துறவற வாழ்வின் பண்புகள் மூன்று தருக.

3.இறையழைத்தலை வேண்டி இறைதந்தைக்கு ஒரு செபம் எழுதுக

7) பின்வருவனவற்றுள் இரண்டினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக

1. நற்கருணை ஆண்டவர்

2. தொடக்கத் திருச்சபை

3.திருமுழுக்கு யோவான்

4. அசீசி நகர் புனித பிரான்சிஸியாரின் செபம்

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

க.பொ.த சா / த முன்னோடி மாதிரி வினாப்பத்திரம் - 2026

G.C.E. O/L Pre- Model Question Paper – 2026

கத்தோலிக்க திருமறை

14	T	1&11

மாதிரி வினாப்பத்திரம் -1

விடைகள்

வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.
1	2	10/ 3	11	1	10/74	21	1	11/2	31	3	11/58
2	1	10/4	12	3	10/75	22	2	11/6	32	3	11/65
3	4	10/11	13	2	10/79	23	1	11/10	33	2	11/71
4	3	10/17	14	3	10/88	24	3	11/12	34	4	11/78
5	2	10/21	15	2	10/95	25	4	11/25	35	2	11/91
6	3	10/26	16	1	10/99	26	2	11/29	36	1	11/102
7	1	10/34	17	4	10/122	27	3	11/32	37	3	11/120
8	3	10/51	18	4	10/123	28	4	11/35	38	4	11/125
9	4	10/57	19	1	10/137	29	1	11/36	39	4	11/135
10	2	10/63	20	4	10/144	30	2	11/48	40	1	11/145

பகுதி – 11

1. யோபு, திருப்பாடல்,நீதிமொழி, சபையுரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம் ,சீராக்கின் ஞானம்.

   (தரம்10 – பக் 2)

2. - 1961 ல் அரச உதவி பெறும் பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டமை

   -பாடசாலைக் கல்வியில் இருந்த சமயச்சூழல் ஒழுக்கம் என்பன பாதிக்கப்பட்டன

   - சமயம் கற்பித்தல் வாரத்திற்கு இரு பாடவேளையாக குறைக்கப்பட்டமை

   - பாடசாலை நிர்வாகம் ஆசிரிய நியமணம் அரசமயமாக்கப்பட்டது. (தரம் 10 - பக் 51)

Past Papers Wiki

3. 2011 வைகாசி 01 - அருளாளர் நிலை

2014 சித்திரை 27 - புனிதர் நிலை (தரம் 10- பக் 72

4. 1.தந்தையரை மேன்மைப்படுத்துவோர் நீடுழி வாழ்வர்

2. அன்னையரை மகிமைப்படுத்துவோர் ஆண்டவருக்குப் பணிந்து நடப்பர் (தரம் 10 - பக் 94)

5. - இயேசுவைக் கைது செய்ய வந்தபோது சீடர்கள் அவரைவிட்டு அகன்று செல்லல்

- தலைமைக் குருவின் பணியாளரின் (மால்குசின்) காதுகளை வெட்டியமை பேதுரு இயேசுவை மும்முறை மறுதலித்தமை (தரம்10-பக் 145)

6. உலகப்படைப்பு மனிதன் பாவத்தில் வீழ்ந்தமை (தரம்11-பக் 1)

7. இ றைவன் - ஆதிப்பெற்றோர்

இறைவன் - நோவா

இறைவன் - ஆபிரகாம்

சீனாய்- உடன்படிக்கை (மோசே) (தரம் 11 –பக் 41,42)

8. குருத்துவம் திருமணம் (தரம் 11 –பக் 84)

9. பகைவரிடம் அன்பு கூருதல், எம்மைத் துன்புறுத்துவோருக்காக செபித்தல் (தரம் 11- பக் 112)

10. உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக.

உமது ஆட்சி வருக

உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல் மண்ணுலகிலும் நிறைவேறுக. (தரம்11- பக் 126)

2)1. நீர் மெசியா வாழும் கடவுளின் மகள் (தரம் 10 பக் 38)

2.-பாவங்களை மன்னித்தல்

-கட்டவும் அவிழ்க்கவும் விசேட அதிகாரம்

-நற்செய்தி விழுமியங்களைப் போதித்தல் (தரம் 10 பக் 38)

3. உண்மைக்கு சான்று பகர்தல்

-தலைவன் பணியாளனாக சேவை புரிதல்

-நேரம் காலம் என்பவற்றை மற்றவர்களுக்காக அர்ப்பணித்தல்

(இது போன்ற விடைகளிருப்பின் புள்ளி வழங்குக)

3) 1. என்னைத்தவிர தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது (தரம்10- பக்78)

2.உன் முழு இதயத்தாடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் முழு மனதோடும் அன்பு செய்ய வேண்டும்

3.இ றைவனை அன்பு செய்தல் , அவரிடம் செபித்தல் , அவருக்குப் பலி செலுத்துதல் , நன்றி கூறல்

(இவை போன்ற விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்)

4) 1. நற்கருணை மன்றாட்டு

இயேசு கற்பித்த செபம் சமாதான வாழ்த்துக் கூறுதல் அப்பம் பிட்குதல்

நற்கருணைபகிர்ந்தளித்தல் நற்கருணை விருந்தின் பின் செபம ˙ (தரம் 10-பக்134)

2. பொருத்தமான பாடல் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

3. பங்குமக்களின் ஆலயச் செயற்பாட்டை அதிகரித்தல்

- வாசகங்களின் பங்கு கொள்ளல்
- காணிக்கைப் பவனியில் பங்கு கொள்ளல்
- வட்டாரங்களில் வழிபாடுகளை ஒழுங்கு செய்தல்

(இவை போன்ற பொருத்தமான விடைகளுக்குப் புள்ளி வழங்குக)

5) 1.இறைசித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர்5

ஒருவருக்காகப் பேசுபவர் (தரம்11 -பக்9)

2. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்

என்கிறார் ஆண்டவர்

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது (தரம்11 -பக்10)

3. உண்மைக்கு சான்று பகர்தல்

மறையறிவை மாணவர்களிற்கு பெற்றுக்காடுத்தல்

ஒதுக்கப்பட்டோருக்காக குரல் கொடுத்தல்

முன்மாதிரிகையான வாழ்க்கை வாழ்ந்து நற்செய்தியை எடுத்துரைத்தல்

தவறுகளை சுட்டிக் காட்டி மக்களை நல்வழிப்படுத்தல்

எதிர்நோக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டல்

(இதுபோன்ற விடைகள் எழுதி விளக்கி இருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

6) 1. தூய பக்கோமியார் தூய ஆசீர்வாதப்பர் (தரம் 11- பக் 94)

2. குழும வாழ்வு , பணிவாழ்வு , செப வாழ்வு (தரம் 11- பக் 95)

7) 1. (தரம் 10-பக்54-56)

2. (தரம் 10 -பக்28 .29)

3. (தரம் 11-பக்45)

4.(தரம் 11-பக்113)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library